[9th August 1966

கனம் திரு. வெ. ராமையா: நான் இப்போது பதில் சொன்னது பூராவும் மிகத் தீவிரமான ஆராய்ச்சித் திட்டங்கள். கனம அங்கத்தினர் கேட்கிற கேள்வி தற்சமயம் ஃபில்ட்டர் பாயின்டஸ் பம்ப்செட் வைத்து கனெக்ஷன் கொடுக்கப்படாமல் இருப்பது பற்றியது. அதைப்பொறுத்த வரையில் மின்சார போர்டோடு கலந்து தொடர்ந்து பரிசீலனை செய்து கனெக்ஷன் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

திரு. செ. மாதவன்: பூமிக்கு அடியில் உள்ள தண்ணீர் ஓட்டத்தைக் கணக்கெடுத்துக் கண்டுபிடிக்க நவீன சாதனங்கள் உபயோகப்படுத்தப்பட்டனவா? அவைகளின் பலன் கிடைத்திருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா: அந்த அடிப்படையில்தான் இந்த இந்த ஆராய்ச்சிகள் நடக்கின்றன. யுனைட்டெட் நேஷன்ஸ் ஸ்பெஷல் ஃபண்டிலிருந்து கருவிகள், யந்திரங்கள் கிடைத்து ஆராய்ச்சிகளெல்லாம் நடந்திருக்கின்றன.

கிராம அதிகாரிகள் வேலை நீக்கம்

*270 **கேள்வி.—திரு. செ. மாதவன்:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) திருச்சி மாவட்டத்தில் 1966-ம் ஆண்டு, பிபரவரி திங்களில் ஏராளமான கிராம அதிகாரிகள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்களா?

(இ) அதன் காரணம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (a) No, Sir.

(b) Does not arise.

Tharumathupatti-Panrimalai road

*271 *Q.*—SRI S. NANJUNDA ROW : Will the Hon. the Minister for Food be pleased to state whether the Government have proposed to include the formation of a new road to Panrimalai from Tharumathupatti in Dindigul taluk in the Fourth Plan?

THE HON. SRI V. RAMAIAH : The work of forming a road from Mallayapuram in the plains to Panrimalai and on to Pachalur has been proposed in the draft Fourth Five-Year Plan. The work will be taken up for execution, subject to availability of funds and its relative priority.

ஸ்ரீகாளத்திநாதர் கோயில் நிலம்

*272 **கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) வடார்க்காடு மாவட்டம், அரக்கோணம் தாலூகா பனப்பாகம் கிராமத்திலுள்ள ஸ்ரீகாளத்திநாதர் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களைப் பஞ்சாயத்து போர்டு பலவந்தமாக